மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : பெரும்பாலும் அப்படிப் பட்டவர்களை வைத்துத்தான் இந்து அறநிலைய ஆலோசனை கமிட்டி ஒன்று இருக்கிறது. அதிலுள்ள உறுப்பினர்கள் அத்தனை பேரும் பெரும்பாலும் கடவுள் நம்பிக்கை கொண்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுடைய யோசனையின் பேரில்தான் இந்த காரியங்கள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவர் அவர்களே, மதத் தலைவர்களில் ஒருவராகிய தவத்திரு குன்றக்குடி அடிகளாரை மேலவைக்கு இந்த அரசு நியமித்திருப்பதனை தமிழ் நாடு இந்து மிஷன்காரர்கள் பாராட்டியிருக்கிறார்களா ? அல்லது வரவேற்றிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லாத காரணத்தினாலே பாராட்டு வரவில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ரா. ராமச்சந்திர துரை : தலைவர் அவர்களே, சென்னை மாநிலத்திலுள்ள கோயில்களில் பல கோயில்களுக்குச் சொந்த மான நிலங்களை வசதிபடைத்த பெரு நிலச்சுவாந்தார்கள் ஆக்கிர மித்து, அதன் வருமானத்தை அனுபவித்து வருவது அரசாங்கத் துக்குத் தெரியுமா? தெரியுமானால் அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? எடுக்கவில்லையென்றால் எடுக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அப்படி எந்தவிதமான தகவலும் எனக்கு இல்லை. தகவல் தெரிவித்தால் நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்து அறநிலையங் களில் கோயில் காரியங்களுக்கு முறையாக செலவிடப்படும் தொகை போக எஞ்சியுள்ள வருவாயை கல்வி, மருத்துவம் போன்ற நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த அரசு முடிவு எடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : சட்டத்திற்கு உட்பட்ட சகல காரியங்களுக்கும் இந்த பணம் செலவழிக்கப்படுகிறது என் பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

Purchase Committee for Tamil Nadu Electricity Board

*10. *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal to constitute a purchase committee in the Tamil Nadu State Electricity Board; and

(*b*) if so, whether the Government would consider inclusion of non-officials in the Committee?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) ஆம். தமிழ்நாடு மின்சார வாரியம், பண்டங்கள் கொள்முதல் ஒப்பந்தப்புள்ளிக்

1969 ஆகஸ்ட் 16]

குழுக்களை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஒன்று தயாரிக்கப்பட்டு, தனது ஒப்பளிப்பிற்காக அனுப்பப்பட வேண்டுமென்று முடிவு செய்துள்ளது.

(இ) பண்டங்கள் கொள்முதல் குழுவில் அரசாங்கச் சார்பற்ற அதிகாரிகளைச் சேர்ப்பது பற்றி, அந்தக் குழு அமைக்கப்படும் பொழுது மின்சார வாரியத்தினல் ஆலோசிக்கப்படும்.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குழுவின் முன்பாக வைக்கப் போவதாகத் தெரிவித்தார்கள். எவ்வளவு விரைவிலே அந்தக் குழு அமைக்கப்படும், எப்பொழுது அது நடைமுறையில் வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: கூடிய விரைவிலே ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, கொள்முதல் குழு என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கேள்வியிலே அதுதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கொள்முதல் குழுவில் யார் யார் இருக்கிறார்கள். யார் யாரைச் சேர்த்துக்கொள்ள அரசாங்கம் யோசிக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: இப்பொழுது எலக்டிரிசிடி போர்டிலே அங்கங்கே இருக்கிற எஸ். ஈக்களைச் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். சிப் இன்ஜினியரையும் சேர்த்துத்தான் இப்பொழுது நடந்து வருகிறது. அரசாங்க சார்பற்றவர்களை சேர்க்க வேண்டுமென்பதுதான் இப்பொழுதுள்ள கேள்வி. அதை அரசாங்கம் பரிசிலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து மின்சார வாரியத்தின் வரவு-செலவுத் திட்டத்தின்மீது விவாதம் நடைபெற இருப்பதால் மேற்கொண்டு துணைக் கேள்விகள் தேவையில்லையென்று நான் நினைக்கிறேன்.

வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் அளிப்பார்கள்.

3. முதலமைச்சர் விளக்கம்.

மத்திய போலீஸ் துறை பற்றிய வினவிற்கு அளித்த விடைகுறித்து

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மத்திய போலீஸ் துறை மாநிலத்திற்கு வருவது பற்றி கேள்விகள் கேட்ட நேரத்தில் ஒரு கேள்விக்கான பதிலை நான் தந்தது குறித்து ஒரு விளக்கம் தர